செ.வெ.எண்: 24 நாள்:09 .11.2017

# பத்திரிக்கை செய்தி

**கரூர் மாவட்டத்தில் கூட்டுறவு வாரவிழா முன்னிட்டு மாணவ மாணவியர்களுக்கான போட்டிகள் 16.11.2017 அன்று நடைபெறுகிறது**

64–ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நவம்பர் 14 முதல் நவம்பர் 20 ம் தேதி வரை கரூர் மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. அதன் ஒரு பகுதியாக வரும் நவம்பர் 16 ஆம் தேதி பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டிகள் நடைபெறவுள்ளதாக கரூர் மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.சொ.சீனிவாசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கரூர் மாவட்டத்தில் 64–ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழாவானது நவம்பர் 14 ஆம் தேதியில் கூட்டுறவு கொடியேற்றத்துடன் தொடங்கப்பட்டு நவம்பர் 20 ஆம் தேதி வரை சிறப்பாக நடைபெறவுள்ளது. வரும் 16.11.2017 ஆம் தேதியில் காலை 10.00 மணிக்கு கரூர் நகரில் செங்குந்தபுரம் பகுதியில் உள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கரூர் மண்டல அலுவலகத்தில் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டிகள் நடைபெறவுள்ளது.

போட்டியில் 6–ம் வகுப்பு முதல் 8–ம் வகுப்பு வரை நுகர்வோரும் கூட்டுறவும் என்ற தலைப்பிலும், 9–ம் வகுப்பு முதல் 10–ம் வகுப்பு வரை கிராமப் பொருளாதாரத்தில் கூட்டுறவின் பங்கு என்ற தலைப்பிலும், 11–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை கூட்டுறவும் வேளாண் உற்பத்தியும் என்ற தலைப்பிலும் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி நடைபெறவுள்ளது.

கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு கூட்டுறவில் இளைய தலைமுறையின் பங்கு என்ற தலைப்பின் கீழ் பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டி நடைபெறவுள்ளது. 6–ம் வகுப்பு முதல் 8–ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியருக்கு கூட்டுறவும் சமூகமும் என்ற தலைப்பின்கீழ் ஓவியப்போட்டி நடைபெறவுள்ளது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**